# பனை அபிவிருத்திச் சபை

## ஆராய்ச்சிப் பகுதி

### 2026ம் ஆண்டுக்கான தேசிய கண்காட்சியினை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள தேசியமட்ட கட்டுரை & ஓவியப் போட்டிகள் - 2026

பனை அபிவிருத்திச் சபை (PDB), யாழ்ப்பாணம், தேசிய கண்காட்சி 2026 ஐ முன்னிட்டு, பனைமரத்தின் மதிப்பு மற்றும் அதன் நிலைத்த பயன்பாட்டைப் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில், நாடு முழுவதும் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளை பெருமையுடன் அறிவிக்கிறது.

கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளுக்கான பொதுத் தலைப்பு

"பனையைத் தறிக்காதே! அதன் பயனைக் குறைக்காதே!"

**ஓவியப் போட்டி விவரங்கள் (PDB/R/01)**

- பிரிவு: 1. பாடசாலை மாணவர்களுக்கானது
  2. திறந்த பிரிவு
- ஓவியம் / கார்ட்டூன் A3 அளவிலான தாளில் வரையப்பட வேண்டும்
- பயன்படுத்துவது: கலர், வாட்டர் கலர், அல்லது பென்சில் ஓவியம்
- ஒருவர் ஒரு ஓவியம் மட்டும் சமர்ப்பிக்கலாம்
- ஓவியம் சொந்த படைப்பாகவும் வெளியிடப்படாததாகவும் இருக்க வேண்டும்

**வினாவிடைப் போட்டி (PDB/R/02)**

- பிரிவு: 1. புாடசாலை மாணவர்களுக்கானது
- விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்
- போட்டி நடைபெறும் இடம் பற்றிய விடயங்கள் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

**கட்டுரைப் போட்டி விவரங்கள் (PDB/R/03)**

- பிரிவு: பாடசாலை மாணவர்களுக்கானது
- மொழி: தமிழ்
- சொல் எல்லை: 750 – 1000 சொற்கள் (திருத்தப்பட்டது)
- கையெழுத்து (தெளிவாக) அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருக்கலாம்
- ஒருவர் ஒரு கட்டுரை மட்டும் சமர்ப்பிக்கலாம்
- கட்டுரை சொந்த படைப்பாகவும் வெளியிடப்படாததாகவும் இருக்க வேண்டும்

**கட்டுரைப் போட்டி விவரங்கள் (PDB/R/04)**

- தலைப்பு: **பனை வளமும் வாழ்வியலும் ஒரு அபிவிருத்திப் பார்வை**
- பிரிவு: திறந்த பிரிவு
- மொழி: தமிழ்
- சொல் எல்லை: 1500 – 2000 சொற்கள் (திருத்தப்பட்டது)
- கையெழுத்து (தெளிவாக) அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருக்கலாம்
- ஒருவர் ஒரு கட்டுரை மட்டும் சமர்ப்பிக்கலாம்
- கட்டுரை சொந்த படைப்பாகவும் வெளியிடப்படாததாகவும் இருக்க வேண்டும்